முற்பகல் 11-45

3. அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்து அவையில் எழுப்புதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேறு பிரச்சினை குறித்துப் பேச அனுமதி கொடுத்த பின்பும், அலுவல் ஆய்வுக் குழு முடிவு குறித்துப் பேசினால் என்ன அர்த்தம்? மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நீங்கள் பேசுவதற்கு, கேட்ட கேள்விக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கக் காத்திருக்கிறார், உட்காருங்கள். நீங்கள் கேள்வி கேட்டதற்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறார் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள். அதன் பிறகும் நீங்கள் வெளிநடப்பு செய்வது நியாயமல்ல. தயவுசெய்து அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேறு பிரச்சினை குறித்துப் பேச அனுமதி கொடுத்த பின்பும், அலுவல் ஆய்வுக் குழு முடிவு பற்றிப் பேச முற்பட்டு, கொடுத்த வாய்ப்பை உறுப்பினர் பயன்படுத்தவில்லை.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *நீங்கள் எழுப்புகின்ற பிரச்சினைக்குத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். பின்பு எதற்குத் தேவையில்லாமல் வெளிநடப்பு செய்கிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முறையல்ல, இவையெல்லாம் முறையல்ல. திரு. பார்த்தசாரதி நீங்கள் பேசுகிறீர்களா இல்லையா? பேசவில்லையென்றால் விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின், இருக்கையில் இல்லை. டாக்டர் கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.*

(உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் ஓர் அட்டையை உயர்த்திக் காட்டினார்.)

திரு. அ. சவுந்தரராசன், இதுபோன்ற பதாகைகளை அவைக்குள் கொண்டுவந்து காட்டுவது முறையல்ல. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் விரிவாக நாம் பேசிவிட்டோம். விரிவாகப் பேசித்தான் நேற்று முடிவெடுத்தோம். (குறுக்கீடு) இதனை நீங்கள் அவையில் விவாதிக்க முடியாது. நீங்கள் வேண்டுமென்றே செய்கிறீர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** *அலுவல் ஆய்வுக் குழுவில் இது குறித்து விவாதித்தபோது, நான் அதில் கலந்து கொண்டவன். (குறுக்கீடு), நீங்கள் அனுமதி கொடுக்காதபோது நான் பதாகையைத்தான் பிடிக்க முடியும், எனக்கு வேறு வழியில்லை. என் கருத்தைச் சொல்ல வேறு என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதனை அனுமதிக்க முடியாது. ஏற்கெனவே நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் ** (குறுக்கீடுகள்)*

திரு. அ. சவுந்தரராசன்: *** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது பொதுவாக சட்டமன்றத்தில் துணை மானியக் கோரிக்கையை விவாதமில்லாமல்தான் நிறைவேற்றியிருக்கிறோம். இந்த முறை துணை மானியக் கோரிக்கையில், விவாதிப்பதற்கு உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். இவ்வளவுதூரம் வாய்ப்புக் கொடுத்தும் மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்குப் பதிலாக, நீங்கள் வீணாகக் காலத்தைக் கடத்துகிறீர்கள். நான் முக்கியமான 3 பிரச்சினைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறேன். நான் முக்கியமான 3 பிரச்சினைகளை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள இருக்கிறேன். நீங்கள் அதைப்பற்றிப் பேசாமல், திரும்பத் திரும்ப அலுவல் ஆய்வுக் குழு முடிவு பற்றிப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தேன். கொடுத்த வாய்ப்பினை நீங்கள் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் பேச வேண்டியதைப் பற்றி, இங்கே பேச முடியாது. திரு. பார்த்தசாரதி,*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் இவ்வாறு செய்வதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) முறையல்ல, கொஞ்சம்கூட நன்றாக இல்லை. நீங்கள் நியாயமான பிரச்சினைகளை, மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்குப் பதிலாக மற்றதையெல்லாம் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நான் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் adamant-ஆக உங்களுடைய கோரிக்கையை மட்டும் ஏற்க வேண்டுமென்று கேட்பது நியாயமில்லை. நான் சபையை அனைவருக்குமாக நடத்தவேண்டும். சபையை இங்கு இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்காகவும் நடத்தியாகவேண்டும். உங்களுக்காக, தனி ஒருவருக்காக நான் சபையை நடத்த முடியாது. இங்கு வந்திருக்கிற, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களையும், அனைத்துக் கட்சிகளையும் நினைத்து சபையைப் பொதுவாக நடத்தியாகவேண்டும். உங்களுக்காக தனியாக சபையை நான் நடத்த முடியாது. உட்காருங்கள். நீங்கள் பேசுவது முறையல்ல, உட்காருங்கள். திரு. பார்த்தசாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் மூத்த உறுப்பினர்கள். விதிகளை நன்கு அறிந்தவர்கள். சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்கக்கூடியவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், மாண்புமிகு அவை முன்னவர் பேசும்போது அமரவேண்டும் என்கிற அந்தப் பண்புகூட இல்லாமல் நிற்கிறீர்களே?*

முற்பகல் 11-50

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *உங்களுக்குத் தெரியாததல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதித்து முடிவு செய்யப்பட்ட ஒரு விஷயத்தை, மீண்டும் சபையில் விவாதிக்க இயலாது என்பதை நன்கு தெரிந்திருந்தும்கூட, நீங்கள் அது சம்பந்தமாக மீண்டும், மீண்டும் தொடர்ந்து பிரச்சினை எழுப்புவது சரியல்ல. இரண்டாவதாக, நீங்கள் கொடுத்த கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் ஏற்றுகொண்டிருக்கிறார். இன்றைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை சிறப்புக் கவன ஈர்ப்பாக*

எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்புகள் குறித்து நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் தகுந்த விளக்கமளிக்க இருக்கிறார். அதேபோல, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் மற்ற உறுப்பினர்கள் கேட்ட அனைத்து வாய்ப்புகளும் மறுக்கப்படவில்லை; வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சில பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. நாளைக்குக்கூட சில பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. நீங்கள் கேட்ட கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டதற்குப் பின்பும் இவ்வளவு பிடிவாதம் பிடிப்பது, அவையிலிருந்து வெளிநடப்பு செய்வதெல்லாம் சரியல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, சபை நடவடிக்கைகளுக்கு நீங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மீண்டும், மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(அ) விதி 110–ன்கீழ் அளிக்கப்பட்ட அறிவிப்புகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இவ்வளவு விளக்கத்திற்குப் பின்பும் நீங்கள் பேசுவது முறையில்லை. (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமில்லை. நீங்கள், உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்கள் கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சபையை நடத்தவிடாமல் இப்படி செய்வது முறையில்லை. (குறுக்கீடு) சபையை நடத்தவிடாமல் செய்வது முறையில்லை. (குறுக்கீடு) திரு. பார்த்தசாரதி, சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் அவையின் உள்ளே வந்து அமர்ந்தனர்.)

திரு. ப. பார்த்தசாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*